**செய்தி வெளியீடு எண்: 780** **நாள்: 27.10.2018**

**செய்தி வெளியீடு**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் 26.10.2018 அன்று தலைமைச் செயலகத்தில், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை சார்பில் விழுப்புரம் மாவட்டம், கள்ளக்குறிச்சி அரசு மாவட்ட தலைமை மருத்துவமனையில் 3 கோடியே 70 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள புறநோயாளிகள் பிரிவுக் கட்டடம் மற்றும் சீமாங்க் மைய அறுவை அரங்கம் ஆகியவற்றை காணொலிக் காட்சி (Video Conferencing) மூலமாகத் திறந்து வைத்தார்கள். மேலும், 10 கோடியே 65 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள மருத்துவக் கட்டடங்களையும் திறந்து வைத்தார்கள்.

ஏழை எளிய மக்களுக்கு உயர்தர மருத்துவ வசதிகள் தங்கு தடையின்றி கிடைக்க வேண்டும் என்ற உயரிய நோக்கில், அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள், மாவட்ட மற்றும் வட்ட அரசு தலைமை மருத்துவமனைகளின் உட்கட்டமைப்பு வசதிகளை வலுப்படுத்துதல் மற்றும் நவீன மருத்துவக் கருவிகள் நிறுவுதல், புதிய ஆரம்ப சுகாதார நிலையங்கள் தோற்றுவித்தல், எளிதில் செல்ல முடியாத பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு, அவர்கள் வாழும் பகுதிக்கு அருகிலேயே தரம் வாய்ந்த மருத்துவ வசதி கிடைக்க வழிவகை செய்தல், தொழில்நுட்ப வளர்ச்சியினை பயன்படுத்தி உயர்தர மருத்துவ வசதிகள் அளித்தல் போன்ற பல முன்னோடி திட்டங்களை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது.

அந்த வகையில், விழுப்புரம் மாவட்டம், கள்ளக்குறிச்சி அரசு மாவட்ட தலைமை மருத்துவமனையில் 3 கோடியே 70 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள புறநோயாளிகள் பிரிவுக் கட்டடம் மற்றும் சீமாங்க் மைய அறுவை அரங்கம் ஆகியவற்றை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் காணொலிக் காட்சி மூலமாக திறந்து வைத்தார்கள்.

மேலும், இராமநாதபுரம் அரசு மாவட்ட தலைமை மருத்துவமனையில் 1 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள மாவட்ட தொடக்க நிலை இடையீட்டுச் சேவைகள் மையம்; கடலூர் மாவட்டம், வேப்பூர் அரசு மருத்துவமனையில் 1 கோடியே 23 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 30 படுக்கைகள் கொண்ட மேம்படுத்தப்பட்ட மருத்துவமனைக் கட்டடம்; காஞ்சிபுரம் மாவட்டம், திருப்போரூர் அரசு

மருத்துவமனையில் 1 கோடியே 12 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 60 படுக்கைகள் கொண்ட மேம்படுத்தப்பட்ட மருத்துவமனைக் கட்டடம்; கன்னியாகுமரி மாவட்டம், குழித்துறை அரசு மருத்துவமனையில் 50 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள குழந்தைகள் நலப் பிரிவுக் கட்டடம்; புதுக்கோட்டை மாவட்டம், கறம்பக்குடி அரசு மருத்துவமனையில் 80 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனைக் கட்டடம்;

பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறை சார்பில், திண்டுக்கல் மாவட்டம் – உலுப்பகுடி, சிவகங்கை மாவட்டம் – மறவமங்கலம் மற்றும் விழுப்புரம் மாவட்டம் – இராதாபுரம் ஆகிய மூன்று மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு 3 கோடியே 60 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள கட்டடங்கள்; கோயம்புத்தூர் மாவட்டம்– ஆனைகட்டி, நாமக்கல் மாவட்டம் – செவிந்திப்பட்டி, விருதுநகர் மாவட்டம் – மீனாட்சிபுரம் மற்றும் தேனி மாவட்டம் – குமணன்தொழு ஆகிய நான்கு ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு 2 கோடியே 40 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள கட்டடங்கள்;

என மொத்தம், 14 கோடியே 35 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள மருத்துவமனை கட்டடங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் திறந்து வைத்தார்கள்.

புதுடெல்லியில் இந்தியன் எக்ஸ்பிரஸ் குழுமத்தின் சார்பில் 5.10.2018 அன்று நடைபெற்ற நிகழ்ச்சியில், தமிழ்நாடு அரசின் சிறப்பான தாய் சேய் நல சேவையினைப் பாராட்டி, இந்தியன் எக்ஸ்பிரஸ் குழுமம் தமிழ்நாட்டிற்கு, தாய் சேய் நல சேவைக்கான சிறப்பு விருதினை வழங்கியது. தமிழ்நாடு அரசின் சார்பில் இவ்விருதினை மாநில நலவாழ்வு குழும இயக்குநர் டாக்டர் தாரேஸ் அகமத், இ.ஆ.ப., அவர்கள் பெற்றுக் கொண்டார். தமிழ்நாட்டில் 2013–ஆம் ஆண்டு 79–ஆக இருந்த மகப்பேறு மரண விகிதம் 2016–ஆம் ஆண்டு 66–ஆக குறைத்ததற்காகவும், 65 விழுக்காடு பிரசவங்கள் அரசு மருத்துவ நிலையங்களில் நடைபெறுவதற்காகவும், மகப்பேறு நிதி உதவித் திட்டத்தை சிறப்பாக செயல்படுத்தி வருவதற்காகவும் இவ்விருது தமிழ்நாட்டிற்கு வழங்கப்பட்டுள்ளது.

புதுடெல்லியில் பாப்புலேஷன் பவுன்டேஷன் ஆஃப் இந்தியா என்கிற அமைப்பு அகில இந்திய அளவில் ஒவ்வொரு மாநிலத்திலும் சுகாதாரம், குடிநீர், மகப்பேறு நலம், குழந்தைகள் நலம், ஊட்டச்சத்து மற்றும் மகளிருக்கான அதிகாரம் போன்றவற்றில் சிறப்பாக செயல்படும் மாவட்டத்திற்கு பரிசு வழங்கி வருகிறது. புதுடெல்லியில்

12.10.2018 அன்று நடைபெற்ற நிகழ்ச்சியில், அகில இந்திய அளவில் பொது சுகாதாரத் துறையில் சிறப்பாக செயல்பட்டதற்காக 2018ஆம் ஆண்டிற்கு தமிழ்நாட்டின் நாகப்பட்டினம் மாவட்டம் தேர்வு செய்யப்பட்டு, அதற்காக வழங்கப்பட்ட 6–வது ஜெ.ஆர்.டி. டாடா மெமோரியல்–2018 நினைவு பரிசு மற்றும் 2 லட்சம் ரூபாய்க்கான காசோலையை மத்திய அரசின் நிதி ஆயோக் துணைத் தலைவர் டாக்டர் ராஜீவ் குமார் அவர்களிடமிருந்து, நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் சீ. சுரேஷ்குமார், இ.ஆ.ப., அவர்கள் பெற்றுக் கொண்டார்.

இந்தியன் எக்ஸ்பிரஸ் குழுமம் தமிழ்நாட்டிற்கு வழங்கிய தாய் சேய் நல சேவைக்கான சிறப்பு விருது மற்றும் பாப்புலேஷன் பவுன்டேஷன் ஆஃப் இந்தியா அமைப்பு நாகப்பட்டினம் மாவட்டத்திற்கு வழங்கிய 6–வது ஜெ.ஆர்.டி. டாடா மெமோரியல்–2018 நினைவு பரிசு ஆகியவற்றை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் டாக்டர் சி. விஜயபாஸ்கர் அவர்கள், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்களிடம் காண்பித்து வாழ்த்து பெற்றார்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் டாக்டர் சி. விஜயபாஸ்கர், தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன், இ.ஆ.ப., தமிழ்நாடு சுகாதாரத் திட்ட இயக்குநர் திருமதி பி. உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., மருத்துவக் கல்வி இயக்குநர் டாக்டர் எட்வின்ஜோ, மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்குநர் டாக்டர் என். ருக்மணி, பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து இயக்குநர் டாக்டர் கே. குழந்தைசாமி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**
**நாள்: 27.10.2018**